செய்தி வெளியீடு எண் :- 78 நாள் :- 17.07.11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 17.7.2011

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், ஆசூர் கிராமத்தில் 15.7.2011 அன்று தனியார் ஒருவருக்குச் சொந்தமான கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது, கிணற்றின் உட்புறச் சுவர் இடிந்து விழுந்ததில் திரு. இருளப்பன் என்பவரின் மகன் திரு. நாராயணன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும், திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. கருப்பசாமி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் சிகிச்சை பலனளிக்காமல் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமானவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்